1986 நவம்பர் 24]

சென்னை மூலக்கொத்தளம் பேருந்து நிலையம்.

149—(*வினா எண். 8431) திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூலக்கொத்தளம் (பேசின் பாலம்) பேருந்து நிலையத்தை சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் மூலக்கொத்தளம் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தின் அருகில் பக்கிங்காம் கால்வாய் இருக்கின்றது. அதன் பக்கத்தில் எதிரிலேயே கருவாட்டு மண்டி இருக்கின்றது. அதனால் சுகாதார வசதி குறைவாக இருக்கின்றது. எதிர் காலத்தில் கொத்தவால் சாவடியை கோயம்பேட்டுக்கு மாற்ற இருக்கிறோம். ஆகவே அந்த இடத்திற்கு பேருந்து நிலையத்தை மாற்ற அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த கருத்துருவும் இது பற்றி அரசினிடத்தில் தற்போதில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பேசின் பிரிட்ஜ் பஸ் நிலையம் போதுமானதாக இல்லை. அங்கு பயணிகளுக்கு ஷெல்ட்டர்கள் இல்லை. எனவே அதை விரிவுபடுத்தி அங்கு ஷெல்ட்டர்கள் அமைத்துக் கொடுக்கின்ற பணியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிய பொதுநல நிதி.

150—(*வினா எண். 9123)-திரு. ச. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85, 1985–86 ஆகிய ஆண்டுகளில் பொதுநல நிதியிலிருந்து வாங்கிய மின்விளக்குகள், குடிதண்ணீர் குழாய்கள், சத்துணவுப் பொருள்கள் ஆகியவைகளின் விபரம் என்ன ?